862

உ

வேலுமயிலுந்துணை.

தென்னாற்காடுஜில்லா சிதம்பரம் தாலுக்காவைசேர்ந்த

பழைஞநல்லூரெனும் நகரில்

திருக்கோயில் கொண்டிருக்கின்ற

# பெரியநாயகியம்மன்

# பதிகம்.

இஃது

ஷெடியூர் க்ஷத்திரியகுலதிலகர்

அ. துரையப்பதேவரவர்கள்

வேண்டுகோட்கிணங்கி

இராமநாதபுரம் சமஸ்தான வித்வான்

P. சிவசாமிசேருவைகாரரால்

இயற்றி

சிதம்பரம்.

...ஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

...ப்பிக்கப்பட்டது.

... ஆகஸ்டுமீ 1௳

...AUG193...

இ25:417

N30.

186236

உ

வேலுமயிலுந்துணை.

தென்னாற்காடுஜில்லா சிதம்பரம் தாலுக்காவைசேர்ந்த

பழைஞநல்லூரெனும் நகரில்

திருக்கோயில் கொண்டிருக்கின்ற

# பெரியநாயகியம்மன்

# பதிகம்.

இஃது

ஷயூர் க்ஷத்திரியகுலதிலகர்

அ. துரையப்பதேவரவர்கள்

வேண்டுகோட்கிணங்கி

இராமநாதபுரம் சமஸ்தான வித்வான்

P. சிவசாமிசேருவைகாரரால்

இயற்றி

சிதம்பரம்.

ஸ்ரீகுஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1930௵ ஆகஸ்டுமீ 1௳

உ

வேலுமயிலுந்துணை.

# முன்னுரை.

தேடரும்புகழா ரோங்கிய தவத்தான்
திகழ்தரு முயரிய நலமே
நாடருங் குணவான் நவையறு நடையான்
நளினவா தனியுறை யுரவோன்
நீடரும் பெலவான் நிகழ்தரு கொடையான்
நிலமகள் தவமென வொளிருஞ்
சேடரும் புகழ்தற் கரிதென வளமார்
சேதுநன் நாட்டிறை சமுகம்

மன்னிய புலவோர் குருமுனி வனினும்
மாண்புறு திறத்தின ரவருள்
நன்னயப் புலமை நிரம்பில னெனவே
நானறிந் தவையைவிட் டகன்று
பொன்னிநன் நாட்டின் தலம்பல காண்பான்
போந்திடும் நாளகத் தொருநாள்
உன்னியவளமார் கொள்ளிடக் கரையின்
ஒளிர்திரு நாரையூ ருறவே.

பொன்னரும் புனித நாவலந் தீவாம்
பூவையி னெழில் பெறுவதன
மன்னரும் புகழார் சென்னிநன் னாடாம்
மதிபுரை யொளியுறு நுதலில்
பன்னருந்திலத மெனப்பொலி வுறுமால்
பழைஞநல் லூரெனும் பதியங்
குன்னருஞ் சிறப்பார் வன்னியி லுதித்த
வுயரிரண் டாம்வரு ணமதில்,

வார்தரு கொடையான் துரையப்ப னெனும்பேர்
வாய்ந்திடுந் தேவ ரினினிய
சீர்தரு புகழின் திறத்தினைப் பலருஞ்
செப்பிடக் கேட்டுள மகிழ்ந்து
தார்தரு நிறத்தா னவன்றனை யடைந்தோம்
தாங்கணி வுடனெமை நோக்கி
பேர்தருமவர்கள் குலதெய்வ மாகும்
பெரியநா யகியின்மேற் பாட.

வேண்டுமென் றெமையே கேட்டன னாக
விருப்புட னதனைநன் கியற்றி
யீண்டிய கவியை யாயிர முப்பா
னேகமாம் பிரமோ தூத
வாண்டினி விடப மதியினி லாறைந்
தாமொன்று சேர்தரு புகர்நாள்
தீண்டிய துதியை சிறந்தபூ ராடஞ்
சேர்தா வரங்கேற் றினனே.

மன்னும் பழைனாநல்லூர் மாசனங்கள் வாழியவே
தென்னார் துரையப்ப தேவருமே—நன்னயஞ்சேர்
மக்கள்மனை சுற்றமொடு மானிலத்தில் நீடூழி
தக்கபடி வாழி தழைத்து.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# பழைஞநல்லூர்,

# பெரியநாயகியம்மன் பதிகம்.

---

## காப்பு.

### நேரிசை வெண்பா.

நல்வளஞ்சே ரும்பழைஞ நல்லூரின் பால்விளங்குந்
தொல்பெரிய நாயகியின் றேளணிபப்—பல்வளமார்
செந்தமிழ்ப்பா மாலைசொலச் சீர்தருமொற் றைக்கொம்பார்
தந்திமுகன் செய்ய திருத்தாள்.

## நூல்.

186236

### எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீர்மருவு பழைஞநல் லூரிலடி யேன்முனோர்
செய்தவத் துற்ற பயனே
கார்மருவு கொண்டலங் காடுபடர் மின்னலே
கருணை கடாக்ஷி யுமையே
பேர்மருவு தருகளான் நிதிமணிக ளொப்பவே
பிறங்குமொரு தேவி வருவாய்
ஏர்மருவு பெரியநாயகி யென்னு மம்மையே
யெங்கள்குல தெய்வ மணியே. (1)

தொழுமரிய நின்பதச் சேவைமற வாதுநான்
தொண்டுசெய் தென்று மகிழ்வேன்
முழுதுமொரு வின்பவடி வானபா மேஸ்வரி
முத்திதரு கின்ற பரையே.

பழுதினியோ ரெள்ளளவு மெங்களுக் கெய்தாது
பழைஞநல் லூரி லமரும்
எழுதரிய வடிவமே பெரியநா யகியெனும்
எங்கள்குல தெய்வ மணியே. (2)

நாதமய மாகியகி லத்துநிறை கின்றதொரு
நார ணி வாமி யுமையே
வேதமுறை பூரணி பழைஞநல் லூரிலே
விளங்குமபி ராமி விமலி
சீதகள பத்தனச் சின்மயா நந்தியே
திகழுமுன் றன்கி ருபையால்
ஏதமற வினிதருள் பெரியநா யகியெனும்
எங்கள்குல தெய்வ மணியே (3)

நன்றுவள மேவுதிரு பழைஞநல் லூரிலே
நவில்காலி கன்று பலவும்
துன்றுமுன தடிமையா மெங்கள்மனை மக்களுந்
துலங்குநில மும்ப யிர்களும்
ஒன்றுபல வாகநெடு நாள்தழைத் தோங்கவே
வுவந்தருள வேண்டு மனையே
என்றுமுள சத்தியே பெரியநா யகியெனும்
எங்கள்குல தெய்வ மணியே. (4)

பங்கயா தனமுறையும் வேதமுறை நாவலும்
பாம்பணையின் மேவு மரியும்
சங்கைபிறை சூடிநின் பக்கமுறை நக்கனுங்
கருதரிய வேத முதலே
துங்கமிகு பழைஞநல் லூரில்வளர் செல்வியே
துகளறுத் தின்பு தருவாய்
எங்குநிறை ஜோதியே பெரியநா யகியெனும்
எங்கள்குல தெய்வ மணியே. (5)

பன்னரிய வாழையொடு மாபலா வென்னுமுப்
    பழமுருக் திட்ட ரசமும்
கன்னல்கறி மேதிகடை வாயொழுகு சாறுமே
    கலந்த சுறும் ஓடை பாயச்
சொன்னலம லிந்துவிளை பழைஞநல் லூரிலருள்
    சூல்கொண்ட நீலி வருவாய்
இன்னமுத மென்னவொளிர் பெரியநா யகியெனும்
    எங்கள்குல தெய்வமணியே. (6)

நாடரிய புகழ்பரவு பழைஞநல் லூரிலோர்
    நலம்பெருக வந்த தருவே
தேடரிய செல்வமே தீஞ்சுவைக் கட்டியே
    திகழ்கின்ற தூய மறையுங்
கூடரிய அருவமே வுருவமே அருவுருவு
    குலவுமொரு வஞ்ச வெளியே
ஈடரிய தாகிவரு பெரியநா யகியெனும்
    எங்கள்குல தெய்வ மணியே. (7)

அன்புவலையிற் புகுந் தொளிர்கின்ற கிள்ளையே
    யானந்த மான மயிலே
யென்புமற வுருகுமொரு தொண்டருள மலரிலே
    யினிதுவிளை யாடு மனமே
மன்புனித ரூபியே பழைஞநல் லூரிலோர்
    மாண்புபெற நீடு சிவையே
இன்புறு குணகரப் பெரியநா யகியெனும்
    எங்கள்குல தெய்வ மணியே. (8)

பஞ்சான னன்றனது மெய்யிலொரு பாதியைப்
    பற்றிநிறை கின்ற கொடியே
அஞ்சாத சண்டனடி யாரிடத் தெங்கணு
    மணுகாது பேணு முதல்வி

செஞ்சவே வளமருவு பழைஞநல் லூரிலே
தேங்குமொரு ஞான வடிவே
எஞ்சவே யருள்செயும் பெரியநா யகியெனும்
எங்கள்குல தெய்வ மணியே (9)

கண்டுகனி யமுதுசற் கரைபாகு தேனிவை
கலந்தசுவை நோக்கில் நுகா
தொண்டுதரு மன்பர்முன்வந்துதவு நியலேயே
தோகைபெறு பச்சை மயிலே
மண்டுவள மார்கழனி பழைஞநல் லூரிலே
மருவுநிச் சேப நிதியே
இண்டுமுடி யான்மருவு பெரியநா யகியெனும்
எங்கள்குல தெய்வ மணியே. (10)

## வாழ்த்து.

வானமும் மாரிபெய்க வார்பழைஞ நல்லூரார்
தானதரு மஞ்செழித்துத் தாஞேங்க—கோனுயாப்
பன்னுமறை யோங்கப் பதிகநன் றேவிளங்க
வுன்னுபுவி வாழியுவந்து.

முற்றும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186236
சென்னை-600 008